# இரண்டாம் திருப்புதல் பொதுத் தேர்வு - 2020

**வகுப்பு 12** பதிவெண் | | | | | | |

நேரம்: 3.00 மணி **வரலாறு** மொத்த மதிப்பெண்கள்: 90

**அறிவுரைகள்:** 1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க:** **20×1=20**

1) மாறுபட்ட ஒன்றைத் தேர்வு செய்க.

அ) வில்லியம் ஜோன்ஸ் ஆ) சார்லஸ் வில்கீன்ஸ்

இ) மாக்ஸ் முல்லர் ஈ) அரவிந்த கோஷ்

2) பின்வருவனவற்றை பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.

அ) பாலகங்காதர திலகர் - 1. இந்தியாவின் குரல்

ஆ) தாதாபாய் நௌரோஜி - 2. மெட்ராஸ் டைம்ஸ்

இ) மெக்காலே - 3. கேசரி

ஈ) வில்லியம் டிக்பை - 4. இந்தியக் கல்வி குறித்த குறிப்புகள்

அ) 2, 4, 1, 3 ஆ) 3, 1, 4, 2 இ) 1, 3, 2, 4 ஈ) 4, 2, 3, 1

3) சூரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்கு காங்கிரஸின் அடுத்த தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு யாருடைய பெயர் தீவிர தேசியவாதிகளால் முன்மொழியப்பட்டது?

அ) அரவிந்தகோஷ் ஆ) தாதாபாய் நௌரோஜி

இ) ஃபெரோஸ் ஷா மேத்தா ஈ) லாலா லஜபதி ராய்

4) பனாரஸ் இந்துப்பல்கலைக்கழகம் யாரால் நிறுவப்பட்டது?

அ) மகாத்மாகாந்தி ஆ) மதன்மோகன் மாளவியா

இ) திலகர் ஈ) பி.பி. வாடியா

5) பின்வரும் எந்த ஒன்று சரியாகப் பொருந்தவில்லை?

அ) பஞ்சாப் துணை ஆளுநர் - 1. ரெஜினால்டு

ஆ) தலித்-பகுஜன் இயக்கம் - 2. டாக்டர் அம்பேத்கார்

இ) சுயமரியாதை இயக்கம் - 3. ஈ.வெ.ரா. பெரியார்

ஈ) சத்தியாகிரக சபா - 4. ரௌலட் சட்டம்

6) இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?

அ) 1920 ஆ) 1925 இ) 1930 ஈ) 1935

7) முகலாயர் காலத்தில் அலுவலக மற்றும் நீதிமன்ற மொழியாக விளங்கியது எது?

அ) உருது ஆ) இந்தி இ) மராத்தி ஈ) பாரசீகம்

8) சுபாஷ் சந்திரபோஸ் எந்த ஆண்டு காங்கிரஸிலிருந்து நீக்கப்பட்டார்?
அ) 1936 ஆ) 1939 இ) 1940 ஈ) 1942

9) மகாத்மா காந்தியடிகள் படுகொலை செய்யப்பட்ட நாள்
அ) ஜனவரி 30, 1948 ஆ) ஆகஸ்ட் 15, 1947
இ) ஜனவரி 30, 1949 ஈ) அக்டோபர் 2, 1948

10) மொழிவாரி அடிப்படையில் அமைக்கப்பட்ட முதல் மாநிலம்
அ) காஷ்மீர் ஆ) அஸ்ஸாம் இ) ஆந்திரா ஈ) ஒரிஸா

11) இந்திய ஒன்றியத்துடன் இணைய மறுத்த காஷ்மீர் மஹாராஜா
அ) ஹரிசிங் ஆ) கிரிராஜ் சிங் இ) மோகன் சிங் ஈ) மாநில மறுவரையறை

12) கூற்று : ஜமீன்தாரிமுறை ஒழிப்பு அதன் முக்கிய நோக்கத்தில் ஒரு பகுதியையே எட்டியது.
காரணம் : பல நிலச்சுவான்தார்கள் குத்தகைதாரர்களை வெளியேற்றி நிலம் அவர்களது சுயக்கட்டுப்பாட்டின் கீழ் வேளாண்மையில் உள்ளதாக உரிமை கோரினர்.
அ) கூற்று, காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று, காரணம் தவறு. காரணம் கூற்றை விளக்கவில்லை.
இ) கூற்று சரி, காரணம் தவறு. ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

13) இந்திய அரசியலமைப்பின் முதலாவது திருத்தம் எப்போது மேற்கொள்ளப்பட்டது?
அ) 1951 ஆ) 1952 இ) 1976 ஈ) 1978

14) வெளிநாட்டு நிறுவனங்களுக்கு எவருடைய வெற்றி பெரிதும் ஊக்கம் தந்தது?
அ) மார்க்கோ போலோ ஆ) ரோஜர் பேக்கன்
இ) கொலம்பஸ் ஈ) வில்லியம் டிக்பை

15) கீழ்க்கண்டவற்றில் எது லியானர்டோ டாவின்சியின் ஓவியம் இல்லை?
அ) வர்ஜின் ஆஃப்ராக்ஸ் ஆ) இறுதி விருந்து
இ) மோனலிசா ஈ) மடோனாவும் குழந்தையும்

16) நியூ ஆம்ஸ்டர்டாமிற்கு ............. என மறுபெயர் சூட்டப்பட்டது.
அ) வாஷிங்டன் ஆ) நியூயார்க் இ) சிக்காகோ ஈ) ஆம்ஸ்டர்டாம்

17) 'இரு உலகங்களின் நாயகன்' என கொண்டாடப்பட்டவர்
அ) சார்லஸ் ஆல்பிரட் ஆ) பிஸ்மார்க்
இ) மூன்றாம் நெப்போலியன் ஈ) கரிபால்டி

18) முசோலினி ஆசிரியராகப் பணியாற்றிய பத்திரிக்கையின் பெயர் யாது?
அ) அவந்தி ஆ) ப்ராவ்தா இ) மாமர்க்சிஸ் ஈ) மெயின் காம்ப்

19) பொருத்துக:
அ) ஆஸ்திரியா - 1. டிரையனான்
ஆ) ஹங்கேரி - 2. செயின்ட் ஜெர்மெய்ன்
இ) பல்கேரியா - 3. நியூலி
ஈ) துருக்கி - 4. செவ்ரஸ்
அ) 1, 2, 3, 4 ஆ) 2, 1, 3, 4 இ) 3, 1, 2, 4 ஈ) 2, 3, 4, 1

20) லெபனானில் அமெரிக்கா தலையிட்டதை ................ எதிர்த்தது.

அ) துருக்கி ஆ) ஈராக் இ) இந்தியா ஈ) பாகிஸ்தான்

### பகுதி - ஆ

**i) ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

**ii) வினா எண் 30 கட்டாய வினாவாகும்.**

**II. சுருக்கமான விடையளிக்கவும்:** **7×2=14**

21) நவீன கல்வியில் சமயப்பரப்புக் குழுக்களின் பங்கினை விளக்குக.

22) மிதவாத தேதியவாதிகளின் ''இறைஞ்சுதல் கொள்கை'' என்றால் என்ன?

23) கிலாபத் இயக்கம் துவங்குவதற்கான பின்னணி என்னவாக இருந்தது?

24) காந்தியடிகளின் சம்பரான் சத்யாகிரகத்தின் போது உடன் சென்ற உள்ளூர் தலைவர்கள் யாவர்?

25) மீரட் சதி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட குற்றவாளிகளுக்கு ஆதரவாக வாதாடிய வழக்கறிஞரை அடையாளப்படுத்துக.

26) எத்தகைய சூழ்நிலையில் காந்தியடிகள் வெள்ளையனே வெளியேறு இயக்கம் பற்றி சிந்தித்தார்?

27) மெகலனின் கடல்வழி பயணத்தினை குறிப்பிடுக.

28) தொழிற்புரட்சியின் சிறப்புக் கூறுகளை குறிப்பிடுக.

29) ஆறு சரத்துக்களைக் கொண்ட 1838-ம் ஆண்டின் மக்களின் பட்டயத்தை பற்றி எழுதுக.

30) எகிப்து நாசரும் - சூயஸ்கால்வாய் பிரச்சனையும் குறிப்பிடுக.

### பகுதி - இ

**i) ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

**ii) வினா எண் 40 கட்டாய வினாவாகும்.**

**III. குறுகிய விடையளிக்கவும்:** **7×3=21**

31) அலிப்பூர் குண்டுவெடிப்பு வழக்கின் முக்கியத்துவம் குறித்து எழுதுக.

32) ஜாலியன் வாலாபாக் படுகொலை குறித்து குறிப்பு எழுதுக.

33) சிட்டகாங் ஆயுதப்படைத் தாக்குதலை நடத்த சூரியாசென் எவ்வாறு திட்டமிட்டார்?

34) 1921-ல் நடைபெற்ற மலபார் கலகத்தைப் பற்றி காந்தியடிகளின் கருத்து என்ன?

35) உப்புசத்தியாக்கிரகம் பற்றி குறிப்பிடுக.

36) பஞ்சசீலக் கொள்கையின் 5 கோட்பாடுகளை விளக்குக.

37) இந்திய வேளாண்மையின் பின்தங்கிய நிலைக்கு காரணங்கள் யாவை?

38) மறுமலர்ச்சியின் தாயகமாக இத்தாலி விளங்கியது ஏன்?

39) பீட்டர்லூ படுகொலையின் பின்னணி யாது?

40) கெடுபிடிப்போர் - விளக்குக.

## பகுதி - ஈ

**IV. விரிவான விடை தருக:** **7×5=35**

41) அ) இந்தியாவில் தேசிய விழிப்புணர்வுக்கு பிரிட்டிஷாரின் அடக்குமுறை மற்றும் இனவெறிக் கொள்கைகள் எந்த அளவிற்குக் காரணமாக இருந்தன?

(அல்லது)

ஆ) திலகர் மற்றும் அன்னிபெசண்ட் ஆகியோரின் கீழ் துவக்கப்பட்ட தன்னாட்சி இயக்கங்களின் செயல்பாடுகளை விளக்குக.

42) அ) டாக்டர் அம்பேத்காரின் கல்விப்பணி குறித்து, குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நீதிக்காக அவரின் செயலூக்கத்தை முதன்மைப்படுத்தி விளக்குக. (அல்லது)

ஆ) இந்திய விடுதலை இயக்க வரலாற்றில் கப்பற்படை கலகம் ஒரு சிறப்பான அத்தியாயம் என ஏன் கருதப்படுகிறது?

43) அ) 1920 முதல் 1956 வரை இந்திய மாநிலங்கள் மறுசீரமைக்கப்பட்டதின் பல்வேறு நிலைகளைக் கூறுக. (அல்லது)

ஆ) நிலச்சீர்திருத்தங்கள் அவற்றின் நோக்கங்களில் தோல்வியடைந்தது ஏன் என்பதை விளக்குக.

44) அ) இத்தாலிய மறுமலர்ச்சிக்கு பிளாரன்ஸ் நகர மக்கள் ஆற்றிய பங்களிப்பை ஆராயவும். (அல்லது)

ஆ) பாஸ்டில் சிறை தகர்ப்பு முதல் ரோபஸ்பியர் கொல்லப்பட்டது வரையிலுமான பிரெஞ்சுப் புரட்சியின் போக்கினை வரைக.

45) அ) ஜெர்மனியின் உண்மையான வடிவமைப்பாளர் பிஸ்மார்க்கே என ஏன் சொல்லப்படுகிறது? (அல்லது)

ஆ) முதல் உலகப்போருக்கான காரணங்கள், விளைவுகள் பற்றி குறிப்பிடுக.

46) அ) இரண்டாம் உலகப்போர் ஏற்பட ஜெர்மனியும், ஹிட்லரும் எந்த அளவிற்குக் காரணமானவர்கள் என்பதை குறிப்பிடுக.

(அல்லது)

ஆ) உலக பிரச்சனைகளில் ஐ.நா. சபை மௌனமான பார்வையாளராகவே இருந்தது பனிப்போர் காலத்து அனுபவங்களின் வாயிலாகக் குறிப்பிடுக.

47) அ) கீழ்கண்ட உலக வரைபடத்தில் குறிப்பிடுக:

1. நார்வே 2. வடகடல் 3. பெல்ஜியம்

4. சிசிலி 5. இந்தோனேசியா

(அல்லது)

ஆ) இரண்டாம் உலகப்போர் காலக்கட்டத்தில் நேசநாடுகளின் பங்களிப்பு ஏதேனும் ஐந்தினை காலக்கோடிட்டு காட்டுக.

----------